## கருக்கம்

தொழில்நுட்பக் கல்வி துறை – தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் 2020–ம் ஆண்டில் ஆகஸ்ட் மாதத்தில் நடத்தப்பட்டிருக்க வேண்டிய வணிகவியல் தேர்வுகளுக்கு பதிலாக ஒட்டுமொத்தமாக 2021–ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் வணிகவியல் தேர்வுகளை நடத்த அனுமதி – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

உயர்கல்வித் (பி1) துறை

அரசாணை (நிலை) எண்.153

நாள்: 27.10.2020
விகாரி வருடம், ஐப்பசி 11,
திருவள்ளுவர் ஆண்டு 2051.
படிக்கப்பட்டது :

1. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடிதம் எண்.109170/ஆர்1/ 2019, நாள் 11.06.2020.
2. அரசாணை (நிலை) எண்.447, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 31.08.2020.
3. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடிதம் எண்.103370/ஆர்1/2020, நாள் 03.09.2020.

------

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தொழில்நுட்பக் கல்வித் துறையின் கீழ் செயல்பட்டு வரும் வணிகவியல் பயிலகங்களில் வணிகவியல் பாடங்கள் படித்து வரும் மாணவர்களுக்கு வருடத்திற்கு இரண்டு முறை வணிகவியல் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றது என்றும், அத்தேர்வுகளுக்கான 2020–2021–ம் ஆண்டிற்கு நடத்தப்பட வேண்டிய வணிகவியல் தேர்வுகளுக்கான நாட்கள் தொடர்பான திட்டநிரல் (Tentative programme) கால அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். கொரோனா வைரஸ் பாதிப்பின் காரணமாக, தடுப்பு நடவடிக்கையாக தமிழ்நாட்டில் 25.03.2020 முதல் 13.06.2020 வரை முழு ஊரடங்கு அளித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையால் பல அரசாணைகள் வெளியிடப்பட்டன என்றும், அவ்வரசாணைகளில் அனைத்து பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்கள் செயல்பட தடை விதிக்கப்பட்டிருந்தது என்றும், மேலும் அவ்வரசாணைகளில் மாநிலத்தில் இயங்கும் அனைத்து போக்குவரத்தும் இயங்க தடை செய்யப்பட்டிருந்தது என்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மேலும் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் தனது கடிதத்தில், வணிகவியல் தேர்வுகளுக்கான தேர்வு ஆகஸ்ட் 2020–ல் நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக அனைத்து வணிகவியல் பயிலகங்களும் மூடப்பட்டுள்ள காரணத்தால் மாணவர்கள் தேர்வுக்கான பயிற்சி மேற்கொள்ள இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும், மேலும் தேர்விற்கு மாணவர்கள் தயாராகுவதற்கு குறைந்த பட்சம் மூன்று மாதங்கள் பயிற்சி பெற்றால் மட்டுமே தேர்வில் பங்கேற்க இயலும் என்றும் தெரிவித்துள்ளார்.

....2

3. மேலும், 06.07.2020 முதல் 31.08.2020 வரை சில தளர்வுகளுடன் ஊரடங்கை நீட்டித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையால் ஆணைகள் வெளியிடப்பட்டன. அவ்வாணைகளில் பள்ளிகள், கல்லூரிகள், பயிற்சி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்கள் அரசின் மறு உத்தரவு வரும் வரை செயல்படுவதற்கு தடை தொடரும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

4. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் பல்வேறு தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கு 30.09.2020 வரை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாணையில் (clause II item (xii)–ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளதாக தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்:-

> "Skill and Industrial Training Institutes shall be permitted to function from 21.09.2020 by following the Standard Operating Procedures throughout State except in containment zones".

எனவே, மாணாக்கர்களின் நலன் கருதியும், தற்சமயம் உள்ள சூழ்நிலையின் அடிப்படையிலும், ஆகஸ்ட் 2020–ம் ஆண்டில் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் நடத்தப்பட வேண்டிய வணிகவியல் தேர்வுகளுக்கு பதிலாக, ஒட்டுமொத்தமாக 2021–ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் வணிகவியல் தேர்வுகளை நடத்த அனுமதி வழங்குமாறு தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

5. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் மேற்காணும் கருத்துருவானது அரசால் பரிசீலிக்கப்பட்டது. மாணக்கர்களின் நலன் கருதியும், தற்சமயம் உள்ள சூழ்நிலையின் அடிப்படையிலும், தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் 2020–ம் ஆண்டில் ஆகஸ்ட் மாதத்தில் நடத்தப்பட்டிருக்க வேண்டிய வணிகவியல் தேர்வுகளுக்கு பதிலாக, ஒட்டுமொத்தமாக 2021–ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் வணிகவியல் தேர்வுகளை நடத்த அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை – 25.
நகல்:
உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
உயர்கல்வித் துறை, முதன்மைச் செயலாளர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ/உதிரி.

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்